**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 788/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **நித்தீஸ்** |
| Father's / Husband Name | : | **செல்வராஜ்** |
| Address | : | **துறைமங்களம்** |
| Age | : | 20/2026 |

**தேதி : 17.06.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **1, 2 எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது துறைமங்களத்தில் வசித்து தனியார் கல்லூரி ஒன்றில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். அ.சா. 1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். கடந்த 2025ம் வருடத்தில் ஒருநாள் நானும், அ.சா.1ம், நவின் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது சிலருடன் பிரச்சனை ஏற்பட்டது. அந்த பிரச்சனையை ஆஜர் எதிரிகள் செய்தார்களா என்றால் அதைபற்றி என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. நான் மருத்துவமனையிலிருந்தபோது போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01.07.2025ம் தேதி அன்று மதியம் 2.30 மணி அளவில் கல்லூரிக்கு சென்று வீட்டிற்கு செல்ல கல்லூரி பேருந்தை அ.சா.1 தவர விட்டு விட்டதால் எங்களுடன் இருசக்கர வாகனத்தில் துறையூரிலிருந்து பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் நோக்கி சென்றபோது அரசு மருத்துவமனை பிரிவு ரோடு அருகே எங்கள் வாகனம் வந்தபோது ஆஜர் எதிரிகள் TN 46 AE 77 28 என்ற வாகனத்தில் வந்து எங்களை மறித்து ஆபாசமாக பேசி எதிரிகள் கையில் வைத்திருந்த வண்டி சாவியால் அ.சா.1ன் இரண்டு பக்க தாடையிலும் மாறி மாறி குத்தி இரத்த காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், இரண்டாம் எதிரி கையில் வைத்திருந்த கட்டையால் அ.சா.1ன் முதுகில் அடித்தார் என்றும், பின்னர் எதிரிகள் அங்கிருந்து ஓடி செல்லும்போது கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்ற நிகழ்வினை நேரில் பார்த்ததாக போலீஸாரிடம் வாக்குமூலம் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் அவர்களை காப்பாற்ற பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

THAARINI V C

Digitally signed by THAARINI V C
Location: Judicial Magistrate No.1, Perambalur
Date: 2026.06.17 17:37:22 +0530

Judicial Magistrate No.1
Perambalur.